ஆத்தூர் சரக கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் அவர்களின்
செயல்முறை ஆணை:

பிறப்பிப்பவர் : திரு.கு.நரசிம்மன், எம்.ஏ., எம்.பி.ஏ., எச்.டி.சி.எம்.,
துணைப்பதிவாளர்(கூடுதல் பொறுப்பு)
ஆத்தூர் சரகம், ஆத்தூர்.

ந.க.1385/2019/பதொ நாள் : .11.2021

பொருள் : நேரடி நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப்பணி 2015–2016, 2016–2017 மற்றும் 2017–18–ஆம் ஆண்டுகளுக்கான தொகுதி IV-இன் கீழ் இளநிலை உதவியாளராக திரு.வெ.செல்வராசு, பணியில் சேர்ந்தது– பணிவரன் முறைப்படுத்தி ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண்.191/பொது(பணிகள்) நாள்: 01.02.1962.
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண்.1017/ப்பி.எஸ்.டி–G2/2019, நாள்: 13.02.2019.
3. பதிவாளர் அலுவலக இணைப்பதிவாளர் (நிதி மற்றும் வங்கியியல்) செயல்முறை ஆணை ந.க.83453/2018/ பதொ 3(1) நாள்: 08.03.2019.
4. சேலம் மண்டல இணைப்பதிவாளர் அலுவலக துணைப்பதிவாளர்/பணியாளர் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை. ந.க1625/2019/பதொ(2) நாள்: 10.05.2019.

----

ஆணை:

தமிழ்நாடு அமைச்சுப் பணிகளில் அடங்கிய தொகுதி IV–ன் கீழ் 2015–16, 2016–17 மற்றும் 2017–18 ஆண்டுக்களுக்கான காலிப்பணியிடங்களில் இளநிலை உதவியாளராக கூட்டுறவுத் துறையில் பணியமர்வு செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு.வெ.செல்வராசு, பார்வை ( 2 )–இல் காணும் கடிதத்தின்படி கூட்டுறவுத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை ( 3 )–இல் காணும் செயல்முறை ஆணையின்படி சேலம் மண்டலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (4)–இல் காணும் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர், சேலம் அலுவலக துணைப்பதிவாளர் / பணியாளர் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி ஆத்தூர் சரக துணைப்பதிவாளர் அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டு 29.05.2019 முற்பகல் கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்துள்ளார். பார்வை ( 1 )–ல் காணும் அரசாணையின்படி இவருடைய பணிவரன்முறைப்படுத்துவது தொடர்பாக மாண்பமை சென்னை/ மதுரை உயர்நீதிமன்றத்தில் 2015–16, 2016–17 மற்றும் 2017–18–ம் ஆண்டுகளுக்கு

தேர்வாணையத்தால், தொகுதி – IV –இன் கீழ் தெரிவு செய்யப்பட்ட பணிகளின் தொடர்பில் நிலுவையுள்ள நீதிப்பேராணை மனுக்களின் இறுதி முடிவுக்கு உட்படுத்தப்பட்டு இவர் பணியில் சேர்ந்த நாளான 29.05.2019 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி (Regularisation of Service) ஆணையிடப்படுகிறது.

துணைப்பதிவாளர்,
ஆத்தூர் சரகம்.

பெறுநர்:

திரு.வெ.செல்வராசு,
இளநிலை உதவியாளர்,
கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் அலுவலகம், ஆத்தூர்.

நகல்:

1. சேலம் மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர், சேலம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. பணிப்பதிவேட்டிற்கு.
3. இருப்பு கோப்பு (பதொ)